[3rd August 1955

THE HON. SRI A. B. SHETTY :—" Yes, Sir. But it was only a formal recovery."

Lands distributed to landless poor in 1953–54.

* 1898-D *Q*.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of land distributed to the landless poor in the State in the year 1953–54 ; and

(*b*) the number of Harijans among them?

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House."

SRI A. RATNAM :—" எத்தனை மனுக்கள் ஹரிஜனங்களிடமிருந்து வந்தன ? மொத்தம் கொடுக்கப்பட்ட நிலத்தில் எத்தனை எக்கர் நிலம் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டதென்று புள்ளிவிவரம் கொடுக்க முடியுமா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" நோட்டீஸ் கொடுத்தால் கொடுக்க முடியும்."

SRI M. PALANIYANDI :—" கொடுக்கப்பட்ட பதிலிலிருந்து பல ஜில்லாக்களில் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. ஆங்காங்கு ஹரிஜனங்களுக்கு 13 எக்கர், 46 எக்கர், 2 எக்கர் என்று தான் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அநேக ஹரிஜனங்கள் தங்களுக்கு நிலம் வேண்டுமென்று மனுப் போட்டிருந்தும்கூட அவர்களுக்கு நிலம் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகையால் உடனடியாக முதலாவதாக ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதானிருக்கிறது."

4-10 p.m. SRI P. K. GOPALAKRISHNAN :—" Sir, in the answer placed on the table of the House, it is stated that in Malabar an extent of 104 acres of waste land has been distributed to landless poor during the year 1953–54 and among them 28 are Harijans. Sir, in another connexion in this House, the Hon. Minister was pleased to state that there were about 8 lakhs acres of cultivable waste lands and refuted the figure of 18 lakhs acres supplied in the publication of the State Government. While this is so, in Wynaad alone, about 7,000 families have settled in revenue lands. Government now want to evict them instead of assigning the lands to them who have already occupied the lands. In view of the policy of the Government to distribute and assign waste lands to the landless poor, will Government take steps to assign the waste lands in Wynaad to the landless poor who have already occupied the lands? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, the figures mentioned here is regarding the assignments under the ordinary process. But certain extra and special steps are being taken to assign lands quickly. Therefore, more lands would

[a] **Printed as Appendix III on pages 391–392 infra.**

3rd August 1955]

be assigned hereafter. As regards the question whether steps are being taken to evict persons, this is a question depending on other factors and there are certain difficulties. These will be considered separately.''

SRI S. R. ARUMUGAM :—" கோயம்புத்தூர் ஜில்லாவில் 6 எக்கர் 32 செண்டு நிலம் தான் கொடுத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் சர்க்கார் புறம்போக்கு நிலமே இல்லை என்று அர்த்தமா அல்லது ஹரிஜனங்களிடத்திலிருந்து வந்த விண்ணப்பங்கள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை என்று அர்த்தமா ? சர்க்கார் இதைத் தனியாகப் பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" நான் முன்னால் சொன்னது போல், சாதாரண முறையில் அஸெஸ்மெண்ட் செய்ததைப்பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்பெஷலாக செய்தால் இன்னும் அதிக நிலம் கொடுக்கமுடியும். இம்மாதிரி சேலம் ஜில்லாவில் சுமார் 30,000 எக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களிலும் அம்மாதிரியான நடவடிக்கை எடுக்க எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வருகிறது."

SRI S. T. ADITYAN :—" In the rules relating to assignment of lands to the landless poor, is there any preference for Harijans and if not, will Government consider the necessity to amend the rules so that Harijans may be shown preference ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" The present rule is that all landless poor are entitled equally irrespective of caste, creed or colour. "

SRI C. KANDASAMY :—" இந்த ராஜ்யம் பூராவிலுமே 825 மனுதாரர்களுக்கு 1,247 எக்கர் நிலம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்தச் சபையில் பல சந்தர்ப்பங்களில் சுமார் 30 லக்ஷம் ஏககர் தரிசு நிலம் இருக்கிறதென்று சொல்லப்பட்டபோதிலும் பல லக்ஷம் விவசாயிகள் நிலமே இல்லாமல் இருக்கிறார்கள் என்பதால் துரிதமாக, பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு அத்தியாவசியமானது தரிசு நிலங்களை வினியோகம் செய்வது. போன வருஷத்தில் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும் வேறு இருக்கலாம். ஆகையால், கனம் மந்திரி அவர்கள் சீக்கிரம் தரிசு நிலத்தை வினியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU .—" I have already stated that steps have already been taken to make progress in assigning lands and in keeping with the demand. As it has been done in one district, orders are being passed with regard to other districts also and we are allocating special staff so that work in this respect may go on quickly. "

SRI A. RATNAM :—" அதிகமாக விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சேலம் ஜில்லாவில் ஆத்தூர் கிராமத்தில் ஒரு ஹரிஜனுக்குத்தான் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த ஸ்டேட்மெண்டிலிருந்து தெரிகிறது. நஞ்சை வளம் மிகுந்த தஞ்சாவூரிலும் 2 ஹரிஜனங்களுக்குத்தான் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன, 2, 3 பேருக்குத்தான் ஒவ்வொரு ஜில்லாவிலும் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையாகவே ஹரிஜனங்களுடைய குறைகள் அரசாங்கத்தாரால் கவனிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. ஆகையால்

[3rd August 1955

நிலச் சீர்திருத்தம் வெட்டிப் பேச்சுத்தான் என்பதை இது காட்டுகிறது. எனவே ஏதாவது ஒரு உத்தரவு போடுவது என்றில்லாமல், கண்டிப்பான முறையில் இனியாவது ஏதாவது செய்வதற்கு முன்வந்து அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—"சேலம் ஜில்லா பற்றி சொல்லப்பட்டது. இங்கு கொடுத்திருக்கும் தகவல் 1953–54-ம் வருஷத்தைப் பற்றியது. சேலம் ஜில்லாவில் 30,000 ஏக்கர் நிலம் 1954–55-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தப் புள்ளி விவரங்களை நண்பர் ஸ்ரீ ரத்னம் பார்த்தால் சந்தோஷப்படுவார்கள் என்று நினைக்கிறேன்."

SRI V. MUTHU :—"ஜாதி, மத, நிற வித்தியாசம் பாராட்டாமல் நிலம் இல்லாத ஏழைகளுக்கு மாத்திரம் நிலம் கொடுக்க சட்டம் இருக்கிறதென்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கனவே ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்று ஒரு நியதி இருக்கிற காலத்திலே, ஸ்ரீ ரத்னம் சொன்னதிலிருந்து ஒருவர் இருவருக்குத்தான் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. இந்தமாதிரி இன்னும் ஜாதி, மதம், நிறம் இல்லாமல் நிலம் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்குமேயானால், ஒரு ஹரிஜனுக்குக்கூட நிலம் கிடைக்காமல் மற்றவர்களுக்குத்தான் நிலம் கிடைக்கும் போலிருக்கிறது. ஆகையால் நிலம் இல்லாத ஏழைகளில் ஹரிஜனங்கள் இருக்கிறார்களா என்று பார்த்து, அவர்களுக்கு முதல் சலுகை காட்டிவிட்டு பிறகு மற்ற ஜாதி, நிறக்காரர்களுக்கு நிலம் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—"அந்த நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையில் அநேகமாக ஹரிஜனங்கள்தான் அதிகப்படியாக இருக்கிறார்கள்."

SRI V. BALAKRISHNAN :—"மேற்படி நிலம் கொடுக்கும் பிரச்னையில் பெண்கள் அதிகம் கருணை காட்டுவார்களாதலால் பெண்களை விசேஷ அதிகாரிகளாக சில ஜில்லாக்களுக்கு போட்டு நிலம் கொடுப்பதை துரிதப்படுத்துவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—"அதை யோசனை பண்ணலாம். நண்பர் புதுக்கோட்டை அங்கத்தினர் அது விஷயமாக ஒரு ஜாபிதா தயார் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்."

SRI G. GOVINDAN :—"ஹரிஜனங்களுக்கு மட்டும் புறம்போக்கு நிலங்கள் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. மற்ற ஜாதியினரிலும் நிலம் இல்லாத ஏழைகள் இருக்கிறார்கள். நிலமில்லாமல் அவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் நிலம் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் கிராமாந்திரங்களில் உள்ள பிற்பட்ட ஜாதியினர்களும் நிலம் இல்லாமல் கஷ்டப்படுவதால் அவர்களுக்கும் நிலம் கொடுத்தால் விவசாயம் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்குவார்கள். ஆகையால், பிற்பட்ட நிலமில்லாத மக்களுக்கும் நிலம் கொடுக்குமாறு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—"ஹரிஜனங்களைத் தவிர பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் நிலம் கொடுக்கும் விஷயமும் இந்த நிபந்தனையில் அடங்கியிருக்கிறது."

4-20 p.m. SRI T. C. NARAYANAN NAMBIAR :—"The Hon. Minister was saying that orders were being issued and action was being taken in favour of the landless Harijans. May I know whether he is aware—and if he is not aware, let him take the information from me—that some Harijans who were cultivating poramboke lands on

lease in two villages in the Talliparamba firka were evicted from those lands by the Sub-Collector about two months ago and that those lands have been leased to a rich landlord? Will the Government make the officers understand the spirit of the Government Order and see that such action is not taken?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—" I request the hon. Member to put it in writing. I will look into it."

SRI V. C. PALANISAMY GOUNDER :—" ரெவினியூ மந்திரி அவர்கள் சொல்லும்போது, நிலம் ஜாரி பண்ணும் விஷயத்தில் பெருவாரியாக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது சரி. ஆனாலும், ஹரிஜனங்களுக்கு அடுத்தபடியாக மதுவிலக்கினால் வேலையிழந்த மரமேரிகளுக்கும் நிலம் கொடுக்கப்படவேண்டுமெனபதும் அரசாங்கத்தாரின் நோக்கம் அல்லவா? மாஜி மரமேரிகளுக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மந்திரி அவர்கள் சொல்வார்களா?"

THE HON. SRI M. A. MANICKAVELU :—" மாஜி மரமேரிகளும், நிலமில்லாத ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கும் நிலம் கொடுக்கப்படும்."

Wooden bridge at Markanam.

* 1898-E Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the present stage of the construction of the wooden bridge at Markanam, Tindivanam taluk, South Arcot district;

(b) what steps were taken to put up a diversion road when the above bridge fell into dis-repair;

(c) whether this road is still in existence; and

(d) the rate of freight charged from the passenger transport buses for their transhipment by the ferry?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" (a) The work of reconstructing the bridge was completed in December 1954 and the bridge was opened for traffic on 20th December 1954.

" (b) A temporary diversion road was formed along the approaches to the bridge and a ramped cargo lighter was run departmentally across the stream for conveying heavy vehicles;

" (c) No, Sir.

" (d) Rupee one per bus."

Scholarships for Harijan students in Annamalai University.

* 1898-F Q.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) how many Harijan and backward class students studying in the college classes of the Annamalai University applied for residential and non-residential scholarships;

(b) how many scholarships, both residential and non-residential were sanctioned up to 1st October 1953; and